**O.S. No.19/2025**
**Date :20.02.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

PW 3 **திரு. இளங்கோவன்**

**குறுக்கு விசாரணை :**

நான் ரியல் எஸ்டேட் புரோக்கராக தொழில் செய்து வருகிறேன். 28.12.2023–ம் தேதியன்றுதான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தும் போது நான் சாட்சி கையொப்பம் செய்ததாக முதல் விசாரணை சொல்லி உள்ளேனா என்றால் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. மாடசாமியும், உடன் இருந்தவரும் தான் கையெழுத்து போட்டனர். நான் சாட்சி கையெழுத்து போட்டதாக முதல் விசாரணை சொல்லி இருப்பது பொய் என்றால் சரிதான். அன்றைய தேதியில் ஏற்படுத்தப்பட்ட எந்த ஆவணத்திலும் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை மாற்றி தற்போது குறுக்கு விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.20 15:17:33 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.